# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2016

| தரம் : 08 | வரலாறு | நேரம் : |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் : ........................................................ | 2.00 மணித்தியாலம் |


2037

### பகுதி - I

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. கண்டி இராச்சியத்திற்கு வழங்கப்பட்ட பெயர்களில் ஒன்று
    1. மகாதித்த 2. கோகர்ண 3. செங்கடகல 4. கலாதித்த

02. பெதன்கொட பூங்காவில் மூங்கில் முள் தைத்த காயத்தால் மரணமடைந்த மன்னன்.
    1. மாயாதுன்னை 2. 2ம் இராஜசிங்கன் 3. 1ம் விமலதர்மசூரியன் 4. செனரத்

03. நாங்கள் வாசனைத் திரவியங்களையும் கிறிஸ்தவர்களையும் தேடி வந்தோம் எனக் கூறியவர்.
    1. பேடினன் மகலன் 2. வாஸ்கொடகாமா
    3. கிறிஸ்தோபர் கொலம்பஸ் 4. கப்ரால்

04. நாட்டின் அனைத்து நிலங்களும் மன்னனுக்கு உரியதாகக் கருதப்பட்டதனால் மன்னன் அழைக்கப்பட்ட பெயர்.
    1. பூபதி 2. இலங்கேஸ்வரர் 3. இராஜாதிராஜன் 4. திரிசிங்களாதீஸ்வரர்

05. கோட்டை இராசதானியைக் கட்டி எழுப்பிய சேனாதிபதி
    1. நிஸ்ஸங்க அழகக்கோனார் 2. ஜோதிய இளவரசன்
    3. அம்புலுகல இளவரசன் 4. மிகார

06. 1521 ஆம் ஆண்டு நடைபெற்ற மிக முக்கிய நிகழ்வு
    1. போர்த்துக்கேயர் காலியை வந்தடைமை 2. 8ம் வீரபராக்கிரமபாகுவின் மரணம்
    3. விஜயபாகு கொள்ளை 4. தர்மபாலன் முடிசூட்டிக் கொண்டமை

07. 1602 இல் கண்டி மீது படையெடுத்த போர்த்துக்கேயரை விமலதர்மசூரியன் தோற்கடித்த போர்.
    1. பலன போர் 2. தந்துரே போர்
    3. இரந்தனிவல போர் 4. கன்னொருவ போர்

08. கிழக்கு உரோமப் பேரரசின் தலைநகரமாக விளங்கியது.
    1. கொன்ஸ்தாந்தி நோபிள் 2. பீஜிங் 3. லண்டன் 4. லிஸ்பன்

09. கண்டிய மன்னன் விமலதர்மசூரியனுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு வருகைதந்த முதல் ஒல்லாந்த தளபதி.
    1. லோபஸ்டி சௌசா 2. லோறன்ஸ்சோ டி அல்மெயிடா
    3. ஸ்பில் பேஜன் 4. பன்னங்கல் பெக்

10. இத்தாலியில் சிறந்த நூலாசிரியராக விளங்கியவர்.
    1. தோமஸ்மூர் 2. சேக்ஸ்பியர் 3. தாந்தே 4. ஹோமர்



kalvi.lk

11. தென்னாபிரிக்காவின் புயல்முனை (நன்னம்பிக்கை முனை) யை அடைந்த நாடுகாண் பயணி.
1. வாஸ்கொடகாமா
2. கொலம்பஸ்
3. மகலன்
4. அமெரிக்கோவெஸ்புஸி

12. நிரல் "அ" வை, நிரல் "ஆ" வுடன் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் விடை.

| அ | ஆ |
|---|---|
| 1. கவரால் | A. புயல்முனை |
| 2. வாஸ்கொடகாமா | B. கரீபியன் தீவு |
| 3. பார்தலோமியஸ் டயஸ் | C. பிறேசில் |
| 4. கொலம்பஸ் | D. கள்ளிக்கோட்டை |

1. ABCD  2. BCDA  3. CDAB  4. DABC

13. "சாமன்த" என்பதன் பொருள்
1. பிரதேச ஆட்சியாளர்  2. இளவரசன்  3. அரசன்  4. கிராம ஆட்சியாளன்

14. யானைத் தந்தத்தினால் செய்யப்பட்ட சிற்ப வேலைப்பாடுகள் காணப்படும் இடம்.
1. ரிதி விகாரை  2. ருவான் வெலிசாயா  3. தூபராமய  4. எம்பக்கே தேவாலயம்

15. "ஒரேஞ் வில்லியம்" மன்னனின் தாய்நாடு.
1. போர்த்துக்கல்  2. பிரான்ஸ்  3. இங்கிலாந்து  4. ஒல்லாந்து

16. திருகோணமலையின் புராதன பெயர்
1. மகாதித்த  2. கோகர்ண  3. கொடவாய  4. யம்புகோளப்பட்டினம்

17. "செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை" என் அழைக்கப்பட்டவர்
1. கலிலியோ கலிலி
2. நிக்கலஸ் கொப்பனிக்கஸ்
3. ஐசாக் நியூட்டன்
4. லியனாடோ டாவின்சி

18. ஒல்லாந்தரின் கீழைத்தேச மத்திய நிலையமாக விளங்கிய இடம்
1. பத்தேவியா  2. கோவா  3. சென்னை  4. மசூலிபட்டினம்

19. கி.பி 1505 ல் போர்த்துக்கேயர் வரும்போது கோட்டையை ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னன்.
1. சங்கிலி
2. ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன்
3. 8ம் வீரபராக்கிரமபாகு
4. மாயாதுன்னை

20. "வெஸ்ரவோல்ட்" உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட மலையக மன்னன்.
1. 2ம் இராஜசிங்கன்
2. 1ம் இராஜசிங்கன்
3. 2ம் விமலதர்மசூரியன்
4. 1ம் விமலதர்மசூரியன்

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**1ம், 2ம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01\. 1. தரம் எட்டில் இரண்டாம் தவணையில் வரலாற்றுப் பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டுக் கருவிகள் இரண்டினையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

2\. அக்கணிப்பீடுகளை மேற்கொண்ட பாட அலகுகள் எவை? (3 புள்ளிகள்)

3\. அக்கணிப்பீடுகளை மேற்கொள்ள நீர் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

4\. அக்கணிப்பீடுகளை நீர்மேற்கொண்ட போது பெற்றுக்கொண்ட பயன்கள் இரண்டு தருக. (3 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

02\. தரப்பட்ட இலங்கைப் படத்தில் பின்வரும் இடங்கள் குறிக்கும் எழுத்துக்களை அடையாளம் கண்டு குறிப்பிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 4. காலி | 7. கண்டி | 10. அம்பாந்தோட்டை |
| 2. வளவ கங்கை | 5. மட்டக்களப்பு | 6. மாத்தறை | 11. மன்னார் |
| 3. திருகோணமலை | 6. கொழும்பு | 9. மகாவலி கங்கை | 12. சிலாபம் |

(12 x 1 = 12 புள்ளிகள்)

03\. 1. கண்டி இராச்சியத்திற்கு வழங்கப்பட்ட பெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2\. கண்டி இராச்சியத்தின் முக்கிய நாயக்க வம்ச மன்னர்கள் இருவரைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

3\. மேலைத்தேசத்தவர்களால் கண்டி இராச்சியம் கைப்பற்ற முடியாமல் போனதற்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

04\. 1. மறுமலர்ச்சி என்பதன் பொருள் யாது? மறுமலர்ச்சி என்றால் என்ன? (2 புள்ளிகள்)

2\. மறுமலர்ச்சிக் காலத்தில் உருவான பல்கலைக்கழகங்கள் நான்கு தருக? (4 புள்ளிகள்)

3\. மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையின் வளர்ச்சிக்காக மூவரைக் குறிப்பிட்டு அவர்களின் சிறந்த படைப்புக்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

05\. 1. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது இலங்கையில் இருந்த இராச்சியப் பிரிவுகள் எவை? (3 புள்ளிகள்)

2\. ஐரோப்பியரைக் கீழைத்தேசங்களுக்கு வரத் தூண்டிய காரணிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

3\. போர்த்துக்கேயரின் வருகையால் இலங்கையில் ஏற்பட்ட விளைவுகள் 3 தருக. (6 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

06\. 1. கண்டி இராச்சியத்தில் இடம்பெற்ற பின்வரும் போர்களுடன் சம்பந்தப்பட்ட மன்னர்களைக் குறிப்பிடுக.

A - தந்துரே

B - ரந்தனிவெல (2 புள்ளிகள்)


2\. 1ம் விமலதர்மசூரியனின் பௌத்த சமயப் பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

3\. 2ம் இராஜசிங்கன் போர்த்துக்கேயரை வெளியேற்ற மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)



kalvi.lk


A
B
D
E
F
G
H
I
J
K
L
M

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457